Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

FedEx Express®

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 11 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 13 (26.11.2004) வெள்ளிக்கிழமை இதழ்:57

## மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகியது. இதன்பின்னர் மாவீரர் மண்டபங்கள் திறந்துவைத்தல், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்படி மட்டக்களப்பில் தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் மட்டு.- அம்பாறை மாவட்ட கட்டளைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிப் போராளி அக்கரைப்பற்றில் படுகொலை!

### நேற்று மாலை சம்பவம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைபபற்றில் விடுதலைப் புலிப் போராளியொருவர் நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த காந்தன் எனப்படும் சாமித்தம்பி உமாகாந்தன் (வயது 25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று - அம்பாறை வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




மாவீரர் எழுச்சி நிகழ்வான நேற்று தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்துகின்றார்.

# மக்கள் மீதான தாக்குதல்கள்; இனிமேலும் பொறுக்கமுடியாது!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)



விடுதலைப் புலிகள் அமைதி காத்துவருகின்ற சூழலில் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை படைத் தரப்பு நடத்திவருவது – சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதற்கான சூழலை சீர்குலைத்து வருகிறது. படையினரின் நடவடிக்கைகளால் நிலைமை இறுக்கமடைந்துவரும் சூழ்நிலையில் புலிகளோ தமிழ்மக்களோ பொறுமை காப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் காத்திரமான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார். பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மன்னார் – வவுனியாப் பகுதிகளில் இடம்பெற்றமை தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொதுமக்கள் மீது படையினர் மோசமான தாக்குதல்!

### மோதல்களில் 21 பேர் காயம்

(மன்னார்)

மாவீரர் எழுச்சி நாளான நேற்று மன்னார் பஸ் நிலையத்தில் ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக்கொடியை அகற்றிய படையினருக்கும், பொது மக்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களால் நாடாளுமன்ற உறுப்பினர், பங்குத்தந்தை உட்பட 21 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 15 பேர் பொதுமக்கள், 5 படையினர், ஒருவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்ட வேளை அங்கு சுற்றிநின்ற படையினர் அதனைத் தடுத்ததுடன், பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக மன்னார் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொதுமக்களைப் படையினர் தாக்கிக்கொண்டிருந்த வேளை, அங்கு சென்று பொதுமக்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்க முற்பட்டபோது, படையினரின் தாக்குதலில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான விநோநோகராதலிங்கம், மற்றும் கத்தோலிக்க பங்குத்தந்தை ஒருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு மேலதிக படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் காடைத்தனத்துக்கு உடனடியாக முடிவுகட்டுங்கள்!

### புறூவ் ஹொவ்டேக்கு - தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

மாவீரர் நாள் நிகழ்வுகளைச் சீர்குலைக்கும் வகையில் வடதமிழீழப் பகுதியில் மக்கள் மீது சிங்கள இராணுவம் காடைத்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இது தொடர்பாக உடனடியாகத் தலையிட்டு இராணுவ காடைத்தனங்களுக்கு முடிவுகட்டுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ்ஹொவ்டேக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் -

மன்னார், வவுனியா, பேசாலை ஆகிய இடங்களில் மாவீரர்நாள் நிகழ்விடங்களில் அத்துமீறி நுழைந்து, தமிழீழத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது. அடிமைத் தனத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன் மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு நீண்ட நெடுங்காலமாக தூங்கிக் கொண்டிருந்த தமிழ் தேசம் விழித்துக்கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.**

***வே.பிரபாகரன் - தமிழீழ தேசியத் தலைவர்.***

## வவுனியாவிலும் படையினர் சூடு ஆறு பொதுமக்கள் படுகாயம்!

### மாவீரர் நினைவுதினத்தைக் குழப்ப முயற்சி

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம், படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் போராளி ஒருவர் உட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வேப்பங்குளம் பகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது நேற்றுக்காலை 10 மணியளவில் அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் தேசியக் கொடியை உடனடியாக இறக்குமாறு உத்தரவிட்டனர்.

இதற்கு அங்கு கூடியிருந்த பொதுமக்களும், போராளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

**தேசியத் தலைவரின் பொன்விழா அகவைச் சிறப்பிதழ் இன்றைய நமது ஈழநாட்டுடன் இணைப்பாக வெளிவருகிறது.**

# மாவீரர் நாள் நினைவு நிகழ்வுகளிலிருந்து.....!


## யாழ்.மாவட்ட நிகழ்வுகளிலிருந்து....






## மட்டக்களப்பு நிகழ்வுகளிலிருந்து....











## திருகோணமலை நிகழ்வுகளிலிருந்து....



படங்கள்:சசிக்குமார்

# இலங்கையுடனான இராணுவ உடன்பாட்டுக்கு இந்திய இடது சாரிக் கட்சிகள் பெரும் எதிர்ப்பு!

## பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முறையீடு

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவைத் தொடர்ந்து, இந்தியா - இலங்கை இடையிலான உத்தேச பாதுகாப்பு உடன்பாட்டுக்கு இடதுசாரிக்கட்சிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் ளன.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமீபத்தில் டெல்கிக்குச் சென்ற போது, இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. அத்துடன் பலாலி விமானத் தளத்தை இந்தியா சீரமைத்துக் கொடுக்கவும், சயுர என்ற இலங்கைக் கப்பலை பழுது பார்த்துக் கொடுக்கவும் ஒப்பந்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த வைகோ, இந்த ஒப்பந்தத்துக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

யாழ்பாணத் தமிழர்களை அழிக்க, இலங்கைப் படை பாலாலி விமானத் தளத்தைத்தான் பயன்படுத்தியது. அதை இந்தியா சீரமைத்துக் கொடுப்பது இலங்கைத் தழிழர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சீனா, பாகிஸ்தான் நாடுகளிடமிருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது. மீண்டும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மோதல் ஏற்பட்டால், பலாலி விமானத்தளத்தை தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான தளமாகவே இலங்கை பயன்படுத்தும். அதனால், இந்த உத்தேச உடன்பாட்டைக் கைவிட வேண்டும் என்று பிரதமரிடம் வைகோ வலியுறுத்தினார்.

அப்போது, இலங்கைத் தமிழர் நலனுக்கு எதிராக மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று உறுதியளித்தார் பிரதமர் மன்மோகன்சிங்.

இதற்கிடையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி - இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலர் ஏ.பி.பரதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சீதாராம் யெச்சூரி ஆகியோர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினர்.

இலங்கையுடன் ராணுவ ரீதியாக இந்தியா உடன்படிக்கை செய்வது வேறு அர்த்தம் கற்பிப்பதாகிவிடும். பலாலி விமானத் தளம் இராணுவ ரீதியான நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்படக் கூடியது. அதைச் சீரமைத்துக் கொடுப்பது யாழ்ப்பாணத் தழிழர்களுக்கு பாதகமாக அமையும். அது, தமிழகத்திலும் பிறபகுதிகளிலும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் இந்த விடயத்தில் அரசு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இந்த விடயம் இன்னும் விவாத நிலையில் தான் உள்ளது. இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நோர்வே தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறும் வேளையில் இந்தியா கவனமாகச் செயல்பட வேண்டும் என்றும் இடதுசாரித் தலைவர்கள் சுட்டிக் காட்டினர்.

இதற்கு, வைகோ ஏற்கனவே இந்தப் பிரச்சினை குறித்து தனது கவனத்துக்குக் கொண்டு வந்ததாக தெரிவித்த பிரதமர் மன்மோகன் சிங்,

மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கும் இடதுசாரிக்கட்சிகளும் வைகோ நிலைக்கு ஆதரவு தெரிவித்திருப்பதையடுத்து உத்தேச உடன்பாடு குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிகிறது.

# ஆளுநர் மாநாடு திருமலையில் நடைபெறுவது சந்தேகம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படாத நிலையில், மாகாண ஆளுநர்களுக்கான ஆறாவது மாநாட்டை திருமலையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று முதல் 27, 28 ஆம் திகதி வரை திருகோணமலை அலஸ் தோட்டத்தில் உள்ள ஓஷாணிக் ஹோட்டலில் ஆளுநர்களுக்கான மாநாட்டை நடத்த மாகாண அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.

ஆனால், திருமலை மாவட்டத்தில் மாவீரர் தின இறுதி நாள் நிகழ்வுகளுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருவதால், திட்டமிட்டபடி மாநாட்டை நடத்துவதில் சிக்கல்கள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாநாட்டின் தொடக்க நாளன்று மாகாண ஆளுநர்களை அழைத்து வருவதற்காக, திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளின் பாண்ட் வாத்தியக் குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் காரணமாக தமது பாடசாலை பாண்ட் அணிகள் குறிப்பிட்ட நிகழ்வில் பங்கேற்க முடியாதென தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் மறுத்துவிட்டன. (04)

# புதிய எழுது வினைஞர்களுக்கு தென்பகுதியிலேயே நியமனம்!

புதிதாக நியமிக்கப்படவுள்ள எழுதுவினைஞர்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

எழுதுவினைஞர்கள் சேவையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களை, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளதுடன், கொழும்புப் பகுதியில் ஏற்கனவே பணியாற்றியவர்களுக்குச் சொந்த இடங்களுக்கு மாற்றம் வழங்க இருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்கள் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## சுங்க அதிகாரி கொலை

# 3 குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை உறுதி!

சுங்க அதிகாரி அஜித் பிரசன்ன இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கின் பிரதிவாதிகள் மூவருக்கும் உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மரண தண்டனையை உறுதி செய்தது.

2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி களனியில் சுங்க அதிகாரி அஜித் பிரசன்ன சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக உதவி சுங்க அதிகாரி அனுரா வீரவன்ச மற்றும் வஜிர இந்திரநாத், சமன் உதயகுமார ஆகியோருக்கு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையிலான நீதிபதிகள் குழுவே இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை விசாரித்த 3 நீதியரசர்களைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மூவருக்குமான மரண தண்டனையை உறுதி செய்தது.

இலங்கையில் மரண தண்டனையை அமுல்படுத்த ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்ட பின்னர் - மரண தண்டனைத் தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட சம்பவம் இதுவே முதலாவதாகும்.

இந்தத் தீர்ப்பை அடுத்து இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் மரண தண்டனையை எதிர்நோக்கும் கைதிகளின் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் மரண தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ள குற்றவாளிகளின் தொகை 154 இலிருந்து 151 ஆகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# மரண தண்டனை நிறைவேற்றுவோர் பாதுகாப்பு தரக் கோருகின்றனர்!

(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனையை அமுல்படுத்துவதற்குத் தயாராகிவரும் ‘அலுகோசி’கள் தங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டி, போகம்பரை சிறைச்சாலையிலும், வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் தலா 2 பேர் என 4 ‘அலுகோசி’கள் பணியாற்றிவருகின்றனர்.

கடந்த 20 வருடங்களாக மரண தண்டனை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவர்களுக்கு அங்கு எந்தவித வேலைகளும் இருக்கவில்லை.

சிறைச்சாலைத் திணைக்களத் தகவலின்படி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 203 குற்றக் கைதிகளில் 154 பேர் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர்.

47 பெண்கள் உட்பட 49 பேர் மரண தண்டனைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த மரணதண்டனையை நிறைவேற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலை அலுகோசியான சுரனிமல விஜயதுங்க (வயது 25) இது குறித்துத் தெரிவிக்கையில்-

செய்யும் தொழிலே தெய்வம் என்பதால் குற்றவாளியைத் தூக்கில் தொங்கவிடுவதற்குத் நான் தயாராக இருக்கிறேன்.

நீதிபதியொருவரைக் கொல்லுமளவுக்குப் பாதாள உலகக்குழு நாட்டில் பெருகியிருப்பதால், எனது உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என்று அஞ்சுகின்றேன்.

எனக்குப் பாதுகாப்புத் தேவை. சிறைச்சாலைக்கு அருகாமையில் குடியிருப்பு வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் படலம் ஆரம்பமானவுடன் நாங்கள் சுதந்திரமாக நடமாட முடியாதநிலை ஏற்படலாம்.

தண்டனையை நிறைவேற்றக் கூடாது என நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்களுக்கு எச்சரிக்கைகூட விடுக்கப்படலாம் என்று தனது அச்சத்தை வெளிப்படுத்தினார்.

# கைதான ஆறு இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

கொழும்பிலும், பொலன்னறுவையிலும் கைதுசெய்யப்பட்ட ஐந்து தமிழர்கள் உள்ளிட்ட ஆறு பேரையும் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றங்கள் உத்தரவிடடுள்ளன.

கொழும்பில் நாடாளுமன்றம் செல்லும் வீதியில் வைத்து ஆடம்பர வாகனமொன்றில் அமைச்சர்களின் மெய்க்காப்பாளர்கள்போல் சென்றுகொண்டிருந்த நான்கு பேர் நவீனரக மைக்ரோ துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டனர்.

அஞ்சலோ அசங்க ஜயவீர (இரத்மலானை), ஜேசுதாசன் ஜெயராஜ் (திருகோணமலை), சற்குணம் கிருஸாந்தன் (மட்டக்களப்பு - ஆரையம்பதி), வேலுப்பிள்ளை நந்தகுமார் (சிலாபம்) ஆகிய 4 பேரும் கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நீதிபதி சரோஜின குசேல விஜயவர்த்தன முன்னிலையிலும்,

பொலன்னறுவையில் நிராயுதபாணிகளாகக் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு களுவன்கேணியைச் சேர்ந்த இனியவன் என்ற செல்வராஜா நிமலராஜன் மற்றும் மன்னம்பிட்டியைச் சேர்ந்த கந்தன் சுரேஸ்காந்த் ஆகியோர் பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி எஸ். சிவபாதசுந்தரம் முன்னிலையிலும் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பொலன்னறுவை மன்னம்பிட்டியில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இனியவன், கந்தன் சுரேஸ்காந்த் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (01)

# மாவீரர் தினத்தைக் குழப்ப தீய சக்திகள் திட்டமிடுகின்றன

## மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கும், இடைநிறுத்துவதற்கும் சில தீய சக்திகள் சூழ்ச்சி செய்து வருவதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை மகாஜனா கல்லூரி மண்டபத்தில் புளியந்தீவு கோட்டப் பிரதேச மாவீரர்களின் பெற்றோரை சிறப்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அன்புமாறன் உரையாற்றுகையில் -

விடுதலைப் போராட்டத்தை நிராகரிக்கும் சக்திகளும், தமிழர்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது என்பதில் விழிப்புடன் இருக்கும் சக்திகளும் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பத் திட்டமிடுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிரதேசத்தில் எமது போராளிகள் ஆயுத பலமோ, இராணுவ பலமோ இன்றி அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தப் பணியில் ஈடுபட்ட சில போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர். நாங்கள் எத்தகைய அச்சுறுத்தலை எதிர்நோக்கினாலும் மக்களின் பாதுகாப்புப் பலத்தைக் கொண்டுதான் இந்த அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

விடுதலைப் போராட்டத்தை சீர்குலைத்த சக்திகள் வெற்றி பெற்ற வரலாறு இல்லை. அவர்கள் ஒருபோதும் வெற்றி பெறப் போவதுமில்லை எனவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி உரையாற்றும்போது-

தற்போதைய சமாதானத்திற்கான சூழ்நிலை சமபலத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. போரியல் ர்தியாகப் பல வெற்றிகளைப் பெற்ற பின்புதான் சமாதானத்திற்குரிய காலம் உருவாக்கப்பட்டது.

சமாதான ?ூழல் உருவாக்கப்பட்டு 2 வருடம் கடந்துவிட்ட போதிலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவும் இதுவரை நிறைவேறவில்லை.

அரசு இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி உலக நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், இராணுவ பயிற்சி போன்ற நடவடிக்கைகள் மூலம் யுத்தத்துக்குத் தன்னை தயார்படுத்துகின்றது.

எங்களைப் பொறுத்தவரை என்றும் சமாதானத்தின் மீது அக்கறை கொண்டவர்கள். நினைத்திருந்தால் சர்வதேச கடற்பரப்பில் எமது கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம், மட்டக்களப்பில் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்ட போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களின் போது சமாதானத்தைக் குழப்பியிருக்க முடியும்.

ஆனால், நாம் பொறுமையுடனும், உறுதியுடனும் சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் செயலாற்று கிறோம் எனத் தெரிவித்தார். (01)

# தேசியத் தலைவருக்கான [redacted] வாழ்த்துக் கேடயங்கள் கையளிப்பு





















ஏங்கள் தேசியத் தலைவருக்கு
பொன்விழா வாழ்த்து



உலகத் தமிழர்தம் எழுஞாயிறே!

அல்லற்பட்டு அலைந்திடும் ஈழத்தமிழர்தம் விடியலே!

புல்லர்தம் வஞ்சகச் சூதினைப் புறந்தள்ளிடும் புனிதனே!

நல்லவர் தம் உளத்தால், நாவால் வாழ்த்திடும் பெருமானே!

வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!

மாவீரர் போற்றுதும்!

கேதாரநாதன் குடும்பத்தினர்

(990)

## வெள்ளத்தால் இடம்பெயர்வு

யாழ் குடாநாட்டில் பெய்து வரும் மழைகாரணமாக தென்மராட்சியிலுள்ள உதயசூரியன் கிராம மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்.

உதயசூரியன் கிராமத்தில் குடியேறி வாழ்வதற்கு உகந்த மேட்டுநிலப்பரப்பு தென்மராட்சி இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருப்பதால் அங்கு மக்கள் குடியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த பகுதிகளிலேயே மக்கள் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். தற்போது பெய்து வரும் அடை மழை காரணமாக மக்களின் தற்காலிக கொட்டகைக்குள் மழை நீர் புகுந்துள்ளதனால் அங்கு குடியிருந்த 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

அப்பகுதியில் தொடர்ந்து இடம் பெயராது வாழ்ந்துவரும் குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி பல இன்னல்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(17)



50ஆவது அகவை காணும் தேசியத்
தலைவா! தமிழ்த் தாய்
ஈந்த தாலாட்டுப்பா
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ். சிகை ஒப்பனையாளர் சங்கம்

இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/3379)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள் இறைச்சிக் கடைகள் கருவாட்டுக் கடைகள் கோழிக்கடைகள்
துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2005 - திருத்தம்

2004.11.25 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் திருத்தம் செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்றது.

| தொ இல. | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (15% பெறுமதிசேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | 10000.00 | 1,69,8000.00 |
| 14. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 40,400.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.02 | 2500.00 | 4,400.00 |
| 37. | மானிப்பாய் வீதி (ஜின்னாவீதி) ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 42,450.00 |
| 38. | முஸ்லிம்கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | 2500.00 | 28,600.00 |

கலாநிதி க.குணராசா.
மாநகர ஆணையாளர். யாழ்ப்பாணம்.

25.11.2004 (சி-3407)



50ஆவது அகவை காணும்
தேசியத் தலைவா!
உலகெங்கும் தமிழ் வாழ,
தமிழ் மக்கள்
மனங்களில்
நீ வாழ வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்

401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்கள்,
பணியாளர்கள்.

(C/3376)

நிதர்சனம் NIEDHARSHANAM

# தலை நிமிர்வு

தமிழீழத் தேசியத் தலைவரின் விடுதலைப் போராட்ட வாழ்வைச் சுமந்தும்
தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சுமந்தும் இன்று வெளிவருகிறது

தலை நிமிர்வு

எழுத்துருவாக்கம் : கு.வீரா
குரல் : சத்தியா
குரல் ஒலிப்பதிவு : மலையவன்
இசை : இசைப்பிரியன்
படத்தொகுப்பு : பல்லவன்
அமைப்பு : சுந்தர்
அட்டைப்படம் : செந்தோழன்









தமிழீழ விடுதலைப் போரும், தேசியத் தலைவரின் ஐம்பதாவது அகவையும்

இந்த விவரணத் தொகுப்பு -
திரு.வைகோ திரு.அறிவுமதி
திரு.இராமதாஸ் திரு.பழனிபாரதி
திரு.நெடுமாறன் திரு.சீமான் [இயக்குனர்]
திரு.திருமாவளவன் திரு.காசிஆனந்தன் [கவிஞர்]
திரு.புகழேந்தி [ஓவியர்]

உட்படப் பலரின்
வாழ்த்துச் செய்திகளுடன்
வெளிவருகின்றது.

வெளியீடு
நிதர்சனம்

(C/3406)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : வி.விதுசன்
முகவரி : கரவெட்டி.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றோர் ஒப்பம்

# யாழ். குடாநாட்டுப் பிரதேச செயலகங்களில் மோட்டார் போக்குவரத்து படிவங்கள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள படிவங்கள் பிரதேச செயலகங்களால் விநியோகிக்கப்படுவதில்லை என பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வாகன உடமை மாற்றுப் படிவம் படிவம் உட்பட, ஏனைய அனைத்து மோட்டார் போக்குவரத்து திணைக்கள படிவங்களுக்காகவும் மக்கள் பிரதேச செயலகங்களை நாடும் பொழுது, அங்கே படிவங்கள் இல்லாமையால், யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவை நாடிச் செல்கின்றனர்.

இதனால் மக்களுக்கு மட்டுமன்றி, இங்குள்ள மோட்டார் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளுக்கும் வீண் சிரமங்களும், காலதாமதமும் ஏற்படுகிறது.

இதுகுறித்து யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கையில் -

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள படிவங்கள் வநியோகிப்பது பிரதேச செயலகங்களுக்கு உரியகடமை என்றும், தமக்கானதல்ல என்றும் தெரிவித்த அதேவேளை, மக்கள் இவ்வாறு தங்களுடைய அலுவலகங்களை நாடுவதால் இந்தப் படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இந்த விடயம் குறித்து யாழ். பிரதேச செயலகத்தினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமது அலுவலகம் இந்தப் படிவங்களை ஒழுங்காக விநியோகிப்பதாகவும் அதேவேளை குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலகங்களில் இந்த விடயம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்றும் குறிப்பிட்டனர்.

### விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர்தர தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் 2005 ஆம் கல்வி ஆண்டுக்காக, மாணவர்களை அனுமதிக்க கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது.

இந்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்புமாறும் அறிவுறுத்தியிருந்தது. எனினும், தற்போது இதற்கான விண்ணப்பத் திகதி நீடிககப்பட்டு, இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்க முடியும் என இலஙகை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (31)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கு, சமுர்த்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து யாழ். அல்வாய் அம்பாள் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (15)

### மஹா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை வியாபாரிமூலை ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் - இன்று காலை 9 மணி முதல் 9.30 மணிவரை நடைபெறும்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை ஆந்திரப்பிரதேச ஸ்ரீ அருளானந்த சுவாமிகள், பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, வியாபாரிமூலை ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வாசுதேச சர்மா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பூசைகள் தமிழ்நாடு சிவகாம வித்யாபாரதி வேதாந்த பி.ரி.அருணாச்சல கார்த்திகேயன் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது. (116)

# மாவீரர்களின் பெற்றோர் இணுவிலில் கௌரவிப்பு

இணுவில் கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவையினர், இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்தினர் மற்றும் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து இணுவில் பகுதியிலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவித்தனர்.

இந்தக் கௌரவிப்பு வைபவம் நேற்று முன்தினம் வலிதெற்கு தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் செ.இலகுநாதன் தலைமையில் இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலி. தெற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப பவநீதன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரைஎங்கரசு உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இங்கு உரையாற்றிய பலரும் மாவீரர்களின் தியாகங்களை விதந்துரைத்ததுடன், அவர்களது தியாகத்தாலேயே தற்போதைய சமாதான நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தச் சமாதான நிலையைக் குழப்புவதற்குச் சில தீய சக்திகள் முயன்று வருவதாகவும், அதற்கு பொது மக்கள் இடமளிக்கக்கூடாது எனவும் கேட்டுக் கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் வலி. தெற்கு அரசியற்துறைப் பொறுப்பாளரால் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டனர். (91)

### பொது அமைப்புகளுடன் கலந்துரையாடல்

பண்டத்தரிப்பு பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று டிசம்பர் 1 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு - பண்டத்தரிப்பு பட்டினசபை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

# நினைவுத்தூபிகள் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலைப் பகுதியில் இருந்த மாவீரர்களின் நினைவுத் தூபிகளை மீண்டும் வடமராட்சி எழுச்சிப் பேரவையினரும், சனசமூக நிலையங்களும், விளை யாட்டுக் கழகங்களும், கம்பர்மலை மக்களும் இணைந்து புனரமைப்புச் செய்துள்ளனர்.

இந்தத் தூபி மாவீரர் தினமாகிய நாளை காலை 10 மணிக்கு திரைநீக்கம் செய்யப்படவுள்ளன. இதில் முதல் மாவீரர் லெப். சங்கர், கப்டன் பண்டிதர், வீரவேங்கை மகான், வீரவேங்கை குட்டி, லெப். நித்திலா, கப்டன் கனோஜி, வீரவேங்கை ஜெயா ஆகியோரின் நினைவுத் தூபிகளே திரைநீக்கம் செய்யப்படவுள்ளன. (12)

## இணுவில் பகுதியில் குழு மோதல்களையடுத்து

# சனசமூக நிலையத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

இரு குழுக்களிடையே தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த குழு மோதலகளையடுத்து, சனசமூகநிலையப் பகுதியொன்றுக்குப் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

இணுவில் கிழக்கு உதயசூரியன் சனசமூக நிலையப் பகுதிக்கே இவ்வாறு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்றுக்கும், வெறொரு பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்றுக்கும் நீண்டகாலமாகத் தகராறு நடைபெற்று வருகிறது.

இதனால் அடிக்கடி மோதல் சம்பவங்களும், வாள் வெட்டுக்களும் இடம்பெற்றவண்ணமிருந்தன.

கடந்த இரு தினங்களுக்கு முன்னரும் இந்தப் பகுதியில், றேறொரு இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியிருந்தார்.

அத்துடன் சில நாட்களுக்கு முன் இரவுவேளையிலே உதயசூரியன் சனசமூக நிலையப் பெயர்ப் பலகை அடித்து நொருக்கப்பட்டதுடன், தளபாடங்களும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கோப்பாய் பொலிஸார் - இரு பகுதிக்குமிடையே சமரசம் செய்ய முயன்றனர்.

இந்தச் சமரச முயற்சி வெற்றியளிக்காமல், தொடர்ந்தும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதனாலேயே சம்பவம் நடைபெற்று வரும் பகுதியில் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. அத்துடன் அந்த வீதியால் பயணிப்போரும் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர்.

இளைஞர் குழுக்களின் அட்டகாசங்களால் தாம் அமைதி இழந்துள்ளதாக இந்தப் பகுதிப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (94)

# பரீட்சை அலுவலர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி இணைப்பு அலுவர்களுக்கு நாள் ஒன்றுக்கு - 525 ரூபாவும், உதவி இணைப்பாளருக்கு 450 ரூபாவும், இணைப்பு அலுவலக உதவியாளர்களுக்கு 325 ரூபாவும், மேற்பார்வையாளர்களுக்கு 425 ரூபாவும், நிரந்தர நோக்குநர்களுக்கு 375 ரூபாவும், நோக்குநர்களுக்கு 350 ரூபாவும், உதவிப்பணியாளர்களுக்கு 250 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (31)

# அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவு

ஓய்வூதிய முரண்பாடுகளை அகற்றுதல் 6/2004 சுற்று நிருபத்துக்கமைய, இதுவரை 393 ஓய்வூதியர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 130 ஓய்வூதியர்களுக்கு 2004 டிசம்பர் மாதத்தில் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கவுள்ளதாகவும் கரவெட்டிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மேலும் சிலரது சுயவிபரக் கோவைகள் பூரணப்படுத்தப்படாத நிலையில் இருப்பதால், ஓய்வூதியப் பணிப்பாளர்களின் அறிவுறுத்தலை எதிர் பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (13)



யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் மாவீரர்களது பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்ட
பத்தில் இடம் பெற்றது. இதன் போது தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையினை முன்னிட்டு "தமிழீழ தேசியத் தலைவர்" என்னும் மலரினைக் கூட்டுறவுச் சபைத்
தலைவர் கனகசபை வெளியிட, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பெறுவதனை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்
மதத்தலைவர்கள் மற்றும் மாவீரர்களின் பெற்றோர், கூட்டுறவாளர்களை இரண்டாவது, மூன்றாவது படத்திலும் காணலாம்.

# தேசியத் தலைவரின் பொன்விழா அகவைச் சிறப்பிதழ்





## பொன்விழா நாயகனே!

சேனைகள் பல வழிநடத்தி

வெற்றிகள் பல பெற்றுத் தந்தவனே!

சர்வதேசமே தமிழனின் வீரத்தினை

உணரச் செய்தவனே!

பேரினவாத சக்திகள் செய்வதறியாது

நிலை தடுமாறச் செய்தவனே!

பொன்விழா அகவையில் காலடிபதிக்கும்

வையகம் போற்றும் பெருந்தலைவனே!

உன் ஆற்றலும் ஆளுமையும் அதிகரித்து

வெற்றிகள் பலபெற்று

நூறாண்டு காலங்கள்

வாழ வாழ்த்துகின்றேன்

-புதுவை S.வர்மன்-

மண்ணுக்குப் பெருமை நீரே!
மனதுக்குப் பெருமை உம் நினைவே!
கண்ணுக்குப் பெருமை உம்மை காணுதலே!
கடமைக்குப் பெருமை உந்தன் கண்ணியமே.

வையகம் பாலித்திட வந்துதித்த வைகைப் புயலே!
அகவை ஐம்பதைக் கொண்டாடும் இந்நாளில்
இலட்சியம் நனவாக வாழ்த்துகின்றோம்.

**எங்கள் தலைவனை என்றும்**

**வாழ்த்தும்-**

**வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினர்.**

# வெள்ளத்தால் பளை மத்திய கல்லூரி கற்றல் நடவடிக்கை தடைப்படும் ஆபத்து

கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக, பளை நகரப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பளை மத்திய கல்லூரியில் வகுப்பறைக்கு அண்மித்த பகுதிகள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் மழைநீர் தேங்கியுள்ளது. இரண்டொரு நாள் மழை தொடர்ந்து பெய்தால், கல்லூரியில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கை நிறுத்தப்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

வண்ணான்கேணி, தர்மக்கேணி பகுதியில் ஏ-9 வீதியில் இரண்டு இடங்களில் வீதியை மூடி வெள்ளம் நிற்கிறது.

இந்தப் பகுதியிலுள்ள குளங்கள் யாவும் நீர் நிரம்பியதுடன், நெல் வயல்கள் யாவும் வெள்ளத்தில மூழ்கியுள்ளன. (21)






# துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு

(மல்லாவி)

தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் மாவீரர்களின் பெற்றோர்கள் பிரதேச ரீதியாக கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் மாவீரர் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத்தளபதி லெப்கேணல் நகுலன் ஏற்றி வைத்தார்.

முதல் மாவீரர் லெப்.சங்கரின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை மலலாவி மத்திய கல்லூரி உப அதிபர் பா.புஸ்பவதி ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை துணுக்காய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் அணிவித்தார்.

தொடர்ந்து அகவணக்கம்,' மலர் வணக்கத்தைத் தொடர்ந்து இந்த நிகழ்வின் வரவேற்புரையை மல்லாவிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் நிகழ்த்தினார்.

கருத்துரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.





கிளிநொச்சி - வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பொன்விழாவும், மலர் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், நிகழ்வின் மங்கள விளக்கை கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை மாணவருக்கு பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# போர்க்கின் உருவச்சிலை முன்பாக மாங்குளம் வெற்றிவிழா நிகழ்வு!

மாங்குளம் படைமுகாம் தகர்ப்பின் வெற்றிவிழா நிகழ்வு - கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க்கின் உருவச்சிலைக்கு முன்பாக, தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் சிவாணந்தம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் செல்லக்கிளியின் தந்தை ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

லெப்.கேணல் போர்க்கின் உருவச்சிலைக்கான மலர்மாலையை மாங்குளம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன் அணிவித்தார்.

தொடர்ந்து மாங்குளம் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், கல்விப் பணிமனை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன், கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கு.சச்சிதானந்தமூர்த்தி, ஆசிரியர் திருக்கேதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையை தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் பஞ்சலிங்கம் நிகழ்த்தினார்.

## புனரமைக்கப்படாத செம்பியன்பற்று வீதி

மருதங்கேணி - பருத்தித்துறை பிரதான வீதியில் செம்பியன்பற்று வரையான வீதியை புனரமைப்புச் செய்வதற்கென வீதியோரங்களில் கிரவல் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியில் பல மாதங்களாக காணப்படும் கிரவல் மண் - மழைநீருடன் கலந்து, வீதியை சேறாக்கியுள்ளமையால், இந்த வீதியால் பொது மக்கள், மாணவர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்களின் சீருடை காவி நிறமாக மாறியுள்ளதையும் காணக் கூடியதாகவிருக்கிறது

சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யாதது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (21)

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால், குமுழமுனைப் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த மாதம் கமநல சேவை விவசாய உள்ளீடுகள் மானியமாக வழங்கப்பட்டன.

இந்த மானியத்திட்டமானது, போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பின்தங்கிய கிராம விவசாயிகளுக்கே வழங்கப்பட்டன.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு செயலகத்தில் வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு மாவட்டச் செயலகத்தில், தமிழீழ காவல்துறையால் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெற்றது.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வு மாவட்டப் பொறுப்பாளர் செந்தில் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரால் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தூட்டல் நடாத்தப்பட்டது.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வில் துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்கள், வாகன சாரதிகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், சைகைகள் தொடர்பாக விரிவாக எடுத்து விளக்கப்பட்டது.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

# தமிழீழ காவல்துறையினர் சாரதிகளுக்கு வேண்டுகோள்

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் அனைத்து வாகன சாரதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதில் எமது பிரதேசத்தில் அண்மைக்காலமாக பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், வீதிகள் பழுதடைந்து, குன்றும் குழியுமாக உள்ளதாலும், அதில் நீர்தேங்கி நிற்பதாலும் வாகனச் சாரதிகள் வாகனங்களை வீதியில் மெதுவாகச் செலுத்த வேண்டும் எனவும், வீதி விபத்துக்கள் நடைபெறா வண்ணம் வாகனங்களை செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சுழற்சிமுறையில் கடன்

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைப் பரப்புக்குட்பட்ட 20 குடும்பத் தலைவிகளுக்கு, சுய தொழிலில் ஈடுபடுவதற்கு உதவியாகச் சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப் படவுள்ளது.

அங்கத்துவ சங்கங்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழஙகப்பட்ட கடன 10 மாதஙகளில் ரூபா 1500 வீதம் அறவிடப் படவிருக்கிறது.

கடந்த 2002, 2003 ஆம் ஆண்டுகளில் சமாசம் ஒவ்வொருவருடமும் 20 பயனாளிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் மாவீரர் வாரத்தில் வழங்கி உதவியுள்ளது. (21)

# உடையார்கட்டு - சுதந்திரபுரம் வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில்

உடையார் கட்டிலிருந்து சுதந்திரபுரம் கொலனிக்குச் செல்லும் வீதி பாரிய குன்றும், குழியுமாக காணப் படுகிறது.

இதனால் மழைகாலத்தில் குழிகளில் நீர்தேங்கி நிற்பதால், பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட பொது மக்கள் பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியால் வாகனங்கள் செல்ல முடியாதுள்ளது.

யுத்த காலத்தில் சிதைவடைந்த இந்த வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது.

இது பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவை தெரியப்படுத்தியும் இது வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# காவல்துறை நடுவப்பணியகத்தில் மாவீரர் நாள் நிகழ்வு

கிளிநொச்சி காவல்துறை நடுவப் பணியகத்தில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த பரிசோதகர் பொ.பவானி ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை காவல்துறை குற்றத்தடுப்புப் பிரிவுக் கண்காணிப்பாளர் பா.இயலரசன் ஏற்றிவைத்தார். மாவீரர் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்டக் கண்காணிப்பாளர் செ.தனஞ்சயன் ஏற்றிவைத்தார். மாவீரர் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையைத் தமிழீழ காவல்துறை சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் நரேன் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம், அக வணக்கம், உறுதியுரை என்பன இடம்பெற்றன. உறுதியுரையைத் தொடர்ந்து நினைவுரையை காவல்துறைப் பிரதம பரிசோதகரும், கண்காணிப்பாளருமான சி.குணரத்தினம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின்போது காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், பிரதம பரிசோதகர்கள், உப பரிசோதகர்கள், பணிமனைப் பொறுப்பாளர்கள், காவல்துறை உறுப்பினர்கள், போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதில் தமிழீழ விளையாட்டுத்துறை முன்னிற்கிறது

## விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா தெரிவிப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தும் வகையில், தற்போது மேறகொளளப்படும் வேலைத் திட்டங்கள் போன்று - எமது பிரதேசத்தின் விளையாட்டுக்களை ஊக்குவிப்பதிலும் தமிழீழ விளையாட்டுத்துறை தமது பணிகளை ஆரம்பித்துள்ளது என விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் மாவீரர் நினைவாக நடத்தப்பட்ட மாவீரர் வெற்றிக் கேடயத்துக்கான போட்டியின் இறுதி நாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் போட்டியில கலந்துகொண்டவர்களும், முக்கியஸ்தர்களும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலிருந்து பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டனர.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை வவுனியா மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஏற்றி வைத்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்தூர்வது அஃது ஒப்பது இல்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### உலகவங்கியின் எச்சரிக்கை

போர் நிறுத்தம் முறிவடைந்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துவிடும் என்ற உலகவங்கியின் எச்சரிக்கை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

இந்தக் கருத்தை உலகவங்கி சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. இன்று இங்குள்ள மக்களே தெளிவாக உணரக்கூடியளவுக்கு நாட்டின் பொருளாதார நிலை உள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் தொடர்பாக உலகவங்கி தெரிவித்திருக்கும் அதிருப்தியான கருத்து குறித்து அரசாங்கம் கவனத்தில் எடுக்குமா என்பது சந்தேகமே.

உலகவங்கி போன்ற பல்வேறு நிதி நிறுவனங்களின் ஆலோசனையைக் கருத்தில் எடுக்காமல் தனித்துவமாகத் தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் என்று ஜே.வி.பி பிரசாரம் செய்துவரும் நிலையில்தான் உலகவங்கியின் இந்த எச்சரிக்கை வெளியாகியிருக்கிறது.

இந்த எச்சரிக்கை உலகவங்கிக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான முரண்பாடுகளின் எச்சரிப்பாகக் கருதப் படத்தக்கதல்ல.

ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவின் பொருளாதார நிலை ஆட்டம் கண்டு சென்றிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சமாளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வழிமுறைகள் குறித்தே பலத்த சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க அரசாங்க ஊழியர்களின் வேலை நேரம் அதிகரிப்பு, அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பன சர்ச்சைகளுக்குரிய திட்டங்களாகவே காணப்படுகின்றன.

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்பதென்று வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிந்த நிதியமைச்சர் - இந்த விவகாரம் சர்ச்சைக்குரிய ஒன்றாகி சூடு பிடிக்கத் தொடங்கியதும், பின்வாங்கத் தொடங்கிவிட்டார்.

நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தால் வாக்குவாதங்கள் ஏற்படத்தொடங்கியதுடன், ஜே.வி.பியும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கவே நிதியமைச்சர் தொண்டு அடிப்படையில்தான் வேலை நேர அதிகரிப்புக் குறித்து திட்டமிட்டதாகத் தடம்மாறிவிட்டார்.

வேலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்பதென்பது - சர்வதேச தொழிலாளர் சட்டங்களை மீறும் செயல் என்ற வாதம் ஒருபுறம் இருக்க, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமென்றால் அதற்காக ஒரு மணிநேரத்தை தியாகம் செய்வது அவசியம்தான்.

இங்கேதான் ஜே.வி.பி அரசாங்கத்துடன் எந்தளவு தூரம் விலகிநின்று நழுவல் போக்குடன் செயற்படுகிறதென்பது வெளிப்படையாகியிருக்கிறது.

ஜே.வி.பி அமைச்சர் தன்னிச்சையாக ஒன்பது மணி நேர வேலை சாத்தியமே அல்ல! அதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றெல்லாம் முழங்கினார். இது தொழிலாளர்களின் பிரதிநிதி என்று காட்ட ஜே.வி.பி. எடுத்த முயற்சி என்பதைவிட அரச ஊழியர்களின் ஆதரவைத் தமது பக்கம் இழுக்கும் அரசியல் தந்திரமேயாகும்.

இங்கே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற ஜே.வி.பி. தயாரில்லை என்பது வெளிப்படையானதுடன், இதையே அரசியல் நலனுக்குப் பயன்படுத்தவும் ஒத்தியங்கப்போவதில்லை என்பது வெளிப்படையாகிவிட்டது.

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வை வழங்கத் திட்டமிட்டுள்ள அரசாங்கம் - இதைத் தனது அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தவே எத்தனிக்கிறதேயன்றி நாட்டு மக்களின் ஒட்டுமொத்த நலன்குறித்து கவனத்தில் எடுக்கவில்லை.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாமல் - அது நாளாந்தம் உயர்ந்துகொண்டிருக்கும்போது அரச ஊழியர்களுக்கு மட்டும் சம்பள உயர்வை வழங்கினால் அது விலைவாசி உயர்வை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இவற்றையெல்லாம் கணக்கிடாமல் நிதியமைச்சரும், ஜே.வி.பியும் வரவு செலவுத் திட்டத்தை புகழ்ந்துரைத்துக் கொண்டிருக்க உலக வங்கி அது குறித்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

அந்த எச்சரிக்கை தனியே வரவு செலவுத்திட்டத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதனூடாகவே பொருளாதாரத்தை மேம்படுத்தமுடியும்.

இந்த அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் சமாதான முயற்சியிலிருந்து சறுக்கிச் செல்ல முற்படுவதர்னது நாட்டை அரசியல், சமூக, பொருளாதார, பூகோளரீதியான நெருக்கடிக்குள் தள்ளுவதாகவே அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# எம் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயார்!

## கேணல் பால்ராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானம் தொடர்பாக அரசாங்கம் நிரந்தரமானதும் உறுதியானதுமான தீர்வைத் தர வேண்டும். இதனைப் பெற்றுக் கொள்வதற்காகவே போராட்டத்தை நாங்கள் முன்னெடுத்து வந்துள்ளோம் எனவும், எமது மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கம் தர மறுத்து எங்கள் மீது மீண்டும் யுத்தத்தை தொடர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க மேற்கொண்டால், அந்த யுத்தத்தை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் என கேணல் பால்ராஜ் மூதூரில் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சேனையூர் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் 360 மாவீரர்களின் பெற்றோர்கள் விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கேணல் பால்ராஜ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

மீண்டும் எங்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்றவிதமான திட்டங்களை தலைவர் மேற்கொண்டுள்ளார். இதற்கு ஏற்பவே கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை திருகோணமலை மாவட்டத்திற்கு தலைவர் நியமித்துள்ளார்.

மாவீரர்களின் இலட்சியத்தை நிலைநிறுத்த வேண்டியது எங்கள் எல்லோரதும் கடமையாகும். ஒவ்வொரு விடுதலைப் புலி உறுப்பினரும் தான் இறக்கும் தறுவாயில் கூட 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற நம்பிக்கையிலேயே இறப்பைத் தழுவிக்கொள்கின்றார்கள். அவர்களது கனவுகள் நனவாக்கப்படும். இதற்காக நாங்கள் அனைவரும் உறுதியுடன் இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியைத் திருகோணமலை மாவட்டத் துணைத்தளபதி வசந்தன் ஏற்றி வைத்தார். பொதுச்சுடரை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் ஏற்றி வைத்தார். சிறப்புரைகளை திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன், மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

## தன்னியக்கப் பணம் வழங்கும் உபகரணங்கள் பழுதடைந்தன!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகம், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் இயங்கிவரும் இலங்கை வங்கிக் கிளைகளில் பொருத்தப்பட்டிருந்த தன்னியக்கப் பணம் வழங்கும் உபகரணங்கள் கடந்த நான்கு நாட்களாகப் பழுதடைந்துள்ளன.

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களது பணம் மீளப் பெறும் நடவடிக்கைகளை இலகுபடுத்தியிருந்த இந்தத் தன்னியக்கப் பணம் வழங்கும் உபகரணங்கள் பழுதடைந்தமை காரணமாக, குறிப்பாக அரச ஊழியர்களும், வெளி மாவட்டங்களில் இருந்துவரும் வாடிக்கையாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

வங்கி நிர்வாகத்தினர் இவற்றை விரைவாக மீள இயங்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு உதவவேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (31)

## வாய்க்காலில் வெள்ளம் தேங்குவதால் அரியாலையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

அரியாலை, கனகரட்ணம் வீதி மற்றும் கண்டி வீதிப் பகுதிகளிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் சீர்செய்யப்படாததால் அந்த வாய்க்கால்களில் வெள்ள நீர் தேங்குகிறது.

இந்த வாய்க்கால்களில் குப்பைகள், கழிவுப் பொருட்கள் என்பன காணப்படுவதோடு பற்றைகளும் வளர்ந்து காணப்படுகின்றன.

இதன்காரணமாக இந்தப் பகுதிகளிலிருந்து நாயன்மார்கட்டுப் பகுதிகளை நோக்கிச் சென்றடையவேண்டிய வெள்ள நீர் வாய்க்கால்களில் தேங்குகிறது.

இதனால் நுளம்புப் பெருக்கம், சுகாதார்ரச் சீர்கேடு போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# பொலிஸ் நீதித்துறை குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஆலோசனை சபையில் வைத்து நீதித்துறை மற்றும் பொலிஸ் பிரிவுகள் குறித்துத் தான் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் திரிபுபடுத்தி வெளியிடப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகா ஊடகங்கள் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாவலப்பிட்டியவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

நீதித்துறை மற்றும் பொலிஸ் பிரிவுகள் தொடர்பாக நான் தெரிவித்த கருத்தை ஊடகங்கள் திரிபுபடுத்தி வெளியிட்டதையிட்டு நான் ஆச்சரியப்படவில்லை. எனவே இது தொடர்பாக என்னிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை.

ரணிலின் தாயார் மற்றும் அவரது மாமனாருக்குச் சொந்தமான பத்திரிகையொன்றில் நான் நீதித்துறை மற்றும் பொலிஸ் பிரிவுகளைக் குற்றஞ்சாட்டியதாகப் பிரதான தலையங்கம் இட்டுச் செய்தி வெளிவந்திருந்தது.

ஆனால் இந்தத் துறைகள் தொடர்பாக நான் ஒரு சிறியவார்த்தைகூடத் தெரிவிக்கவில்லையெனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

# நெடுந்தீவு பிரதேச மாவீரர்களின் பெற்றோர் நேற்றுக் கௌரவிப்பு!

(நெடுந்தீவு)

மாவீரர் நினைவு நாளினை முன்னிட்டு நேற்று நெடுந்தீவு பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு-பெருந்திரளான மக்கள் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது.

நெடுந்தீவு மத்திய பகுதியில் அமைந்துள்ள மாவீரர் நினைவுச்சுடர் பகுதியில் இருந்து 56 மாவீரர்களதும் பெற்றோர்கள் நெடுந்தீவைச் சேர்ந்த 3 பாடசாலைகளினதும் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் நெடுந்தீவு மத்தியிலுள்ள தனிநாயகம் அடிகள் கலையரங்கில் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத் தலைவர் சு.கோபாலசிங்கம் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை நெடுந்தீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.ரங்கன் ஏற்றிவைத்தார்.

முதலாவது மாவீரர் சங்கரின் திருவுருவப்படத்துக்கு புங்குடுதீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் கார்த்திகைப் பூ அணிவித்து நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார். அதனைத்தொடர்ந்து மாவீரரின் பெற்றோரும், உருத்துடையோரும் கார்த்திகைப் பூவினை அணிவித்து சுடரேற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நினைவு மண்டபத்தில் இருந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் நெடுந்தீவு மகாவித்தியாலய உள்ளரங்கில் பெற்றோர் கௌரவிப்பு வைபவம் நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் வாழ்த்துரைகள், பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பெற்றோர்களுக்கான மதிய உணவு உபசாரம் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் - அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். (113)

## யாழ்.பொது நூலகத்தில் மீண்டும் இணைய சேவை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தில் வைரஸ் தாக்கம் காரணமாக இரு வாரங்களாக செயலிழந்திருந்த இணையத்தள சேவைகள் மீண்டும் புதுமெருகுடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

எனவே மாணவர்கள் மற்றும் வாசகர்கள் மீண்டும் இணையத்தள சேவைகளைப் பயன்படுத்தமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இணையம் மற்றும் அது சார்ந்த சேவைகளை மிகவும் சிறப்பான முறையில் குறைந்த கட்டணத்தில் பொது நூலகம் மக்களுக்குச் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் நாளை முன்னிட்டு 1000 பனம்விதைகள் நடுகை!

(யாழ்ப்பாணம்)

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மாவீரர் நாளை முன்னிட்டு நாளை அரியாலைப்பகுதியில் ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யவுள்ளது.

இந்த நிகழ்வு அரியாலை பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தி.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (55)

## மாவீரர் எழுச்சி நாள் – 2004

# நினைவொலி எழுப்பலும் சுடரேற்றலும்

27 ஆம் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பும். இந்த் நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

இந்த நினைவொலி எழுப்பப்படும்போது காத்திருந்து ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவொலி எழுப்பப்படும் போது வீதியால் பயணம் செய்பவர்கள் நடந்தாயினும், வாகனத்திலாயினும் போனால் உடன்நின்று பின் ஒரு மணித்துளி நேரம் அந்தந்த இடங்களிலேயே அகவணக்கம் செய்தல்வேண்டும்.

துயிலுமில்ல மைதான நிகழ்வில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு, மைதானத்தை சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும் அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற, மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவார்கள். ஒவ்வொரு இல்லங்களிலும். வாசல்களிலும் மாவீரரின் சுடரொளியை மக்கள் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகள் காவியங்களின் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வு களிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி, தியாக தீபங்கள் இவை எனக்கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். நட்சத்திரங்கள் போலத் தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந்த நேரததல் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் ஏற்றியும் பொது இடங்களில் பெரிய சுடர்கள் ஏற்றியும் நினைவுகூர வேண்டும். இந்தச் சுடரேற்றும் நிகழ்வானது-

விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

**- தமிழீழ மாவீரர் பணிமனை.**




யார் வருவார் நிலம் காக்க யாழ் தொடக்கம் குமணவரை
பார் போற்றும் நற்றலைவன் வருவான் என்றேங்கி
விழி வைத்துப் பார்க்கையிலே ஆயிரத்து தொளாயிரத்து
ஐம்பத்து நான்குதனில் கார்த்திகையின் கேட்டையிலே
வல்லை மண் பெருமை பெற வந்துதித்த பெருந் தலைவன்
வேலுப்பிள்ளை பிரபாகரன் வழிகாட்டி நிமிரவைத்தான்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
ஏமாறோம் எவர்க்கும் நாம் அடிமை யல்லோம்
நாமாற நிலம் வேண்டும் நாடாள ஆசையில்லை
என்று குரல் கொடுத்தே முன்னின்று போரிட்டான்
அணியணியாய்த் தமிழர் படை அவர்பின்னே பரணிபாடி
எம்மினத்தின் பெருமைகளை உலகறியச் செய்தனரே.

அன்னியரை நடுங்கவைத்து புதுப்பரணி பாடவைத்த
பெருந்தலைவன் பிரபாவின் புகழ் வாழி
அகவை அரை நூறு உடையான் அகம் நிறைந்த கரிகாலன்
இன்னும் அரை நூறன்ன என்றுமெம் தலைவன் தானே
குன்றுயர வாழவேண்டும் கோலோச்சும் நாள் வரைக்கும்
பின்னும் அவன் நலமேவாழ பெரும் கடவுள் துணையிருக்க
வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம் எம் தலைவன் நீடு வாழ
வாழிஎன்றே வாழ்த்துகின்றோம் வாழியெம் தலைவாவாழி...

**~ வல்லை ஏ. அனந்தராஜ்**

# மதுபோதையால் மரணத்தின் வழிகாட்டியை நோக்கி நகரும் இளஞ்சமூகத்தினர்

இன்று எமது இளஞ்சமூகம் மது போதைக்கு அடிமையாகி அதிலிருந்து விடுபட முடியாது, மேலும் மேலும் அதற்குள் அமிழ்ந்து கொண டிருக்கின்றது. இதற்கு யார் காரணம்? இதன் எதிர்கால விளைவு என்ன? என்று பெற்றோரோ, சமூகமோ சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு சிந்திப்பார்களாயின் பிள்ளைகளின் இந்தச் செயற்பாட்டுக்கு எப்படிப் பணம் கொடுப்பார்கள்.

எமது சமூகத்தில் ஒரு எழுமாற்றான போக்கு பலரிடையே காணபடுகின்றது. அதாவது நேற்றுப் போர், இன்று சமாதானம், நாளை என்ன? சமாதானமா? போரா? இத்தகைய இடர்பாடுகளில் சிக்கித்தவிக்கும் சின்னஞ்சிறிசுகள் எத்தனை நாளதான் வாழப்போகின்றன. எனவே இவர்கள் இருக்கும் மட்டும் தங்களது வாழ்வில் எப்படியாவது சந்தோசப்படட்டுமே என்ற உணர்வேயாகும்.

இத்தகைய உணர்வுப் போக்கானது இளஞ்சந்ததியை தட்டிக் கொடுப்பதாகவே அமைகின்றது. நாளை யுத்தம் தொடர்ந்தால் செல்லடியிலோ அல்லது சுற்றிவளைப்பிலோ தொலைந்து போபவர்கள் தானே, எப்படியும் வாழட்டும் என்ற சமூக நிலைப்பாடு இவர்களை இந்தச் செயற்பாடுகளில் வேகமூட்டுகின்றன.

இவையே சமூகச் சீரழிவுக்கு வழிவகுக்கின்றது. இத்தோடு வெளிநாட்டுக் கலாசாரத்தின் ஊடுருவலும், அதன் பண வருவாய்களும் எமது சமூக வாழ்வுக்குப் போதை ஏற்றுகின்றன. இதற்குச் சினிமாவும் ஒரு காரணமாக அமைகின்றது.

இவ்வாறு ஒருவருக்கு ஆரம்பித்த குடிப் பழக்கமானது. நாட் செல்லச் செல்ல அவர்களை முற்றாக ஆக்கிரமித்து விடுகின்றது. பின்பு இவர்கள் சிந்திக்க முடியாத நிலையில் மேலும் மேலும் குடித்து மீள முடியாது தவிக்கின்றனர். இதைத்தான் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என சொல்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் குடி குடியைக் கெடுக்கும் என்பது உண்மையானதாகும்.

இத்தகைய மதுபானத்தால் அதனை உட்கொண்ட தனிமனிதன் உட்பட அவனது குடும்பம், சமூகம் என்று நாட்டையே பாதிதது விடுகின்றது.

அதாவது மதுபானங்கள் உள் எடுக்கப்பட்ட உடனேயே இரைப்பையிலும், முன் சிறு குடலிலும் அகத்துறிஞ்சப்படுகின்றன. வெறும் இரைப்பையில் மிக விரைவாகவும், உணவுள்ள போது மெதுவாகவும் அகத்துறிஞ்சல் நிகழ்கின்றது.

இந்த மதுபானங்களிலுள்ள அற்ககோலின் நேரடித் தாக்கத்தால் இரைப்பையின் மெல்லிய சீதமேலணி அரிக்கப்பட்டு இரைப்பைத் தாக்கம் ஏற்படுகின்றது. அற்ககோலின் தாக்கத்தால் உயிர் சத்துக்களின் உறிஞ்சல் பாதிக்கப்படுவதோடு, போசனைக் குறைபாட்டால் ஈரல், இதயம், மூளை, நரம்புகள், சதையசுரப்பி, சிறுநீரகம், குருதிக் கலன்கள் போன்ற அங்கங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

எமது இதயம் ஒரு நிமிடத்துக்கு சராசரியாக 72 தடவைகள் துடிக்கின்றன, என்று அது தன் இயக்கத்தை நிறுத்துகின்றதோ அன்றுதான் எமது முடிவுநாள். மதுபோதைக்கு அடிமையானவர்களை எடுத்துக் கொணடால் நாட்பட்ட குடிகாரரின் இதய அறைகள் பெருத்து விரிவடைகின்றன. இதனால் இதய இயக்கத்தில் இடையூறுகள் தோன்றுகின்றன. இவை குருதியை இதயத்துக்குக் கொடுக்கின்ற முடியுரு நாடிகளில் குருதி உறையக் காரணமாகின்றன. இதன் பேறாக மாரடைப்பு ஏற்பட்டு மரணம் நிகழ்கின்றது.

**- எஸ். ஜெயா**

**செய்திக் கட்டுரை...** **கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்**

*(நேற்றைய தொடர்ச்சி)*

# இன்று புதுப்பொலிவுடன் திகழும் செம்பியன்பற்று உப அலுவலகம்

### மருதங்கேணி பொதுச்சந்தை

சந்தையில் அமைந்திருந்த சந்தைக் கட்டடங்கள், கடைத்தொகுதிகள் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் முற்றாக அழிக்கப் பட்டுள்ளன. இந்தப் பிரதேச மக்கள் மற்றும் மாசார், சோரன்பற்று, முகாவில், இயக்கச்சி கிராம மக்கள் தமது பொருட்களை விற்பனை செய்யுமிடமாகவும், மக்கள் தமக்குத் தேவையான மரக்கறி, தேங்காய் மற்றும் பொருட்களைக் கொளவனவு செய்யும் ஒரேயொரு பொதுச் ச்ந்தையாக கடந்த காலங்களில் இது இருந்துள்ளது. கட்டடங்கள் இல்லாத காரணத்தால் தற்காலிக கொட்டில்களிலும் மர நிழல்களிலும் வியாபாரம் நடைபெறுகிறது.

ஆகவே சந்தைக் கட்டடங்கள். கடைத்தொகுதிகள் புதிதாக அமைகப்படுவதுடன் சேதமடைந்த நிலையிலுள்ள பிரதேசசபைக்குச் சொந்தமான மீன் சந்தைக் கட்டடம் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

### பொதுநூல் நிலையம்

பொதுமக்கள், பாடசாலை மாணவர்களின் நலன்கருதி, உப அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கிவந்த பொதுநூலகம், இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த நிலையில், அங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது தற்காலிக நூலகக் கட்டடம் அழிக்கப்பட்டதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான நூல்களும் முற்றாக அழிக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய வ.வேலுமமயிலுவின் காலத்தில் பொதுநூலகததுக்குத் தனியானதொரு கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும் முடிவுறாத நிலையில் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அதுவும் சேதமாக்கப்பட்டது.

ஆகவே சேதமடைந்த பொது நூல் நிலையக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு தளபாடங்கள், நூல்கள், புதினப் பத்திரிகைகள் என்பன பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள நலன் கருதி வழங்கி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

### வீதிகள்

செம்பியன்பற்று, முள்ளிப்பற்றுக் கிராம சபையினரால் 30 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வீதிகளில் ஒன்றிரண்டு தவிர மற்றைய களிமண், தார் வீதிகள் திருத்தப்படாமையால் மக்கள் போக்குவரவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் தொகை அதிகரிப்புக் காரணமாக கிராமங்களில் அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்ட குடியிருப்புப் பகுதிக் களிமண் வீதிகள் மழை வெள்ளம், கடல் வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ளன.

ஆகவே இந்த வீதிகள் அனைத்தும் புனரமைக்கப்படவேண்டும்.

### சனசமூக நிலையங்கள்

கடந்த கால போர் அனர்த்தங்களால் இந்தப் பிரதேசத்திலுள்ள, சனசமூக நிலையக் கட்டடங்கள், தளபாடங்கள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஆகவே அனைத்து சனசமூக நிலையக் கட்டடங்களையும் புனரமைப்பு செய்து அதற்குரிய தளபாடங்கள் வழங்குவதுடன், சனசமூக நிலையம் இல்லாத கிராமங்களில் புதிய கட்டடங்கள் கட்டுதல், சனசமூக நிலையங்களுக்கு வருடாந்த நிதி வழங்குவதுடன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கான சனசமூக நிலையங்களின் சமாசம் அமைத்தல் வேண்டும்.

### கிழக்கெல்லைக் கிராமங்கள்

முள்ளிப்பற்று கிராம சபையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட நான்கு கிழக்கெல்லைக் கிராமங்களில் முளளிப்பற்று கிராம சபையால் அமைக்கப்பட்ட வீதிகள், கிணறுகள், பொது மண்டபங்கள் கடந்த கால போர் அனர்த்தங்களினாலும், மழை நீர், கடல் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

செம்பியன்பற்று கிராம சபை. பருத்தித்துறை பிரதேச சபையால் இந்தப் பிரதேசத்தில் எந்தவொரு புதிய வேலைத்திட்டங்களும் செய்யப்படவில்லை. வீதிகள், பொதுக் கிணறுகள், பொதுமண்டபங்கள் எதுவும் திருத்தம் செய்யப்படவில்லை. முள்ளிப்பற்றுக் கிராம சபையில் இருந்து பிரிக்கப்பட்டு, செம்பியன் பற்றுக் கிராம சபையுடன் நான்கு வட்டாரங்களும் உரிய முறைப்படி ஒப்படைக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்தப் பிரதேசத்தில் எந்தவொரு புதிய வேலைத்திட்டங்களையோ, புனரமைப்பு வேலைகளையோ பருத்தித்துறை பிரதேச சபையால் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு உரிய ஆவணங்களைப் பெற்று, இந்தக் கிராமங்களில் சேதமடைந்த நிலையிலுள்ள வீதிகள், பொதுக் கிணறுகள். பொதுமண்டபங்களை புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

### பொதுவிளையாட்டு மைதானம்

1987 ஆம் ஆண்டு பொதுவிளையாட்டு மைதானத்துக்கென 5 ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டிருந்தும், பல வருடங்களாக மைதான அபிவிருத்தி வேலை எதுவும் பிரதேச சபையால் செய்யப்படவில்லை. தற்போதுள்ள விளையாட்டு மைதானத்துக்கு களிமண் போடப்பட்டிருந்தும் ஒழுங்காக வேலைகள் செய்யப்படாமையால் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டிகள், பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் வெகுசிரமங்களுக்கு மத்தியிலேயே நடாத்தப்படுகின்றன.

ஆகவே விளையாட்டு மைதானம் பூரணமாகத் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

### வடமராட்சி கிழக்கு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்குப் பிரதேச ச்பை இயங்கத் தொடங்கியது. இதன்முதல் விசேட ஆணையாளராக வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் வ.வேலுமமயிலுவைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் செ.சந்திசேகரம் நியமிக்கப்பட்டிருந்தார். வடமராட்சி கிழக்கு பிரதேச சபை உரிய முறையில் வர்த்தமானி பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்படவில்லையெனக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டதுடன் செயலற்றும் போனது.

52 கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தின் நலன், அபிவிருத்தி கருதி மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான புதிய வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இந்தப் பிரதேசத்தின் சகல அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள், மக்கள் நலன்கள், பொதுத் தேவைகள் என்பன உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் முனனெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நீண்டதொரு பிரதேசத்துக்கு, தனியானதொரு பிரதேசசபை அமைக்கப்படாமை பெரும் குறையாகும். இந்தப் பிரதேசத்தின் நலன் கருதி, வடமராட்சி கிழக்குக்கு தனியானதொரு பிரதேச சபை அமைப்பதன் மூலம் இந்தப் பிரதேசம் அபிவிருத்தியடையும். (21)

✡✡✡

# தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில்...

## பொங்கல் நிகழ்வுகள்

(புங்குடுதீவு)

தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினமான இன்று புங்குடுதீவு சிவன் ஆலய முன்றலில் 50 பானைகள் வைத்து பொங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பிறந்ததின நிகழ்வுகள் பொது அமைப்புகளின் ஒன்றிய ஏற்பாட்டில் இன்று காலை 7.30 மணியளவில் நடைபெறும்.

இந்த பொங்கல் நிகழ்வினை புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதிநிதிகள், மாதர் சங்க பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், இந்துமத ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் நடத்தவுள்ளனர்.

(யாழ்ப்பாணம்)

தேசியத்தலைவரின் பொன் விழா நிகழ்வுகள் யாழ்.நல்லூர் கோட்டத்திலும் சிறப்பாக இடம்பெற வுள்ளது.

விசேட நிகழ்வுகளாக முனியப்பர் ஆலய முன்றலில் சனசமூக நிலைய சமாச ஏற்பாட்டில் 50 பானைகளில் பொங்கலும் -

தியாகி அருங்கொடை நிறுவன ஏற்பாட்டில் கைலாசபிள்ளையார் கோயிலில் 1008 சங்காபிஷேகமும், தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இரத்ததானமும் இடம்பெற வுள்ளது. (111)

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததினமான இன்று கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தக சங்கத்தினர் இன்று கலை 7 மணிக்கு கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தினுள் மாபெரும் பொங்கல் விழாவினை நடத்த வுள்ளனர்.

(சாவகச்சேரி)

தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சமூகத்தால் 50 பானைகளில் பொங்கல் இடம்பெறவுள்ளது. (34)

## சமய நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசை, அபிஷேக ஆராதனைகள் என்பன நடைபெற கூட்டுறவாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தப் பூசை வழிபாடுகளில் அனைவரும் கலந்து கொண்டு தலைவரின் நீண்ட ஆயுளுக்கு பிரார்த்தனை செய்யுமாறு யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி சமாசம் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது. (21)

(கோப்பாய்)

தேசியத் தலைவரின் பிறந்த தினமான இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள வித்தக விநாயகர் ஆலயத்தில் விசேட பஜனை, பூசை வழிபாடுகள் இன்று இடம்பெறவுள்ளது.

(கோண்டாவில்)

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இன்று காலை 6.00 மணியளவில் கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்தில் விஷேட பூசை வழிபாடுகளும் விசேட பொங்கல் பூசையும் நடைபெறவுள்ளது. (82)

(வடமராட்சி)

தேசியத் தலைவரின் பிறந்த நாளான இன்று வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் மாலை 4.00 மணிக்கு 108 சங்காபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது. (14)

### இரத்ததான நிகழ்வு

தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் விரிவுரையாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் என 30 பேர் வரையில் இரத்ததானம் வழங்கினர்.

## சிறப்பு நிகழ்வுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், வணிகர் மன்றம் மற்றும் பாடசாலைச் சமூகம் என்பன இணைந்து தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு வாழ்த்து மடல்கள் மற்றும் கேடயங்கள் என்பவற்றை வழங்கியுள்ளனர்.

நேற்று தென்மராட்சியிலிருந்து மூன்று பேருந்துகளில் கிளிநொச்சி சென்ற இவர்கள் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் காலை 11 மணியளவில் வாழ்த்து மடல்களையும் கேடயங்களையும் வழங்கினர். (34)

(புத்தூர்)

தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையினை சிறப்பிக்கும் வகையில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகத்தினர் விசேட கரப்பந்தாட்டப் போட்டியினை நடத்த வுள்ளனர்.

இந்த நிகழ்வானது இன்று கழக மைதானத்தில் பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக விளையாட்டுக் கழகத் தலைவர் தெரிவித்தார்.

(நாவற்குழி)

தேசியத்தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ் மாணவர் ஒன்றியத்தால் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் இன்று காலை 11 மணிக்கு வழங்கப்படவுள்ளது. (34)

(வல்வெட்டித்துறை)

தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது பிறந்த ஊரான வடமராட்சிப் பிரதேசம் பல சிறப்பு நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இந்த வகையில் வடமராட்சி விளையாட்டுக்கழக அணிகள் தலைவருக்கு சிறப்பு விருதுகளை இன்று வழங்கவுள்ளன.

இந்நிகழ்வு இன்று துவிச்சக்கர வண்டி பவனியாக வல்வெட்டித்துறை தலைவரது வீட்டிலிருந்து புறப்பட்டு வடமராட்சி கோட்ட அரசியல்துறை அலுவலகத்தில் ஒப்படைககவுள்ளனர். இதனைவிட மக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும் கொண்டாடவுள்ளனர். (14)

(வடமராட்சி)

வடமராட்சி அரிமா கழகத்தினர் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் மக்களுக்கு உதவிகளைச் செய்ய வுள்ளனர்.

அதன் ஒருபகுதியாக பார்வைக் குறைபாடுள்ள மக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளனர். வடமராட்சி அரிமாக்கழகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (14)

(வடமராட்சி)

தேசியத் தலைவரின் பிறந்த தினமான இன்று சிறப்பு நிகழ்வுகளுக்கு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில் வடமராட்சியில் இன்று பல பகுதிகளிலிருந்தும் காவடி, கரகம் என்பன பருத்தித்துறை நகருக்கு வந்து சேருமெனவும், அங்கு பல கிராமிய கலை நிகழ்வுக்கு ஏற்பாடாகியுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையில் கேக் வெட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (14)

(யாழ்ப்பாணம்)

தமிமீழ விளையாட்டுத்துறையின் வெளியீடுகளான '50 ஆவது அகவையில் தேசியத் தலைவரின் சிந்தனையில்', தமிழீழ விளையாட்டுத்துறை (சஞ்சிகை) உதைபந்தாட்டப் பயிற்சி தமிழ்மொழியாக்கம் (இறுவெட்டு) சென்சி.லீ. சிமித்தின் தமிழீழ வருகை (கராத்தே இறுவெட்டு) என்பவற்றின் வெளியீட்டு விழா நிகழ்வு இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்.

### போட்டி முடிவுகள் வெளியாகின

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இந்தப் போட்டியின் முதலாமிடத்தை அரசாங்க வைத்தியசாலை முழங்காவிலைச் சேர்ந்த டொக்டர் ச. முருகானந்தம், இரண்டாமிடத்தை உடையார்கட்டு வடக்கு முல்லைத்தீவைச் சேர்ந்த வி.பானு, மூன்றாமிடத்தை 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசு ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்றுமாலை 4 மணியளவில் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கப் பணிமனையில் இடம்பெற்ற பின்னர் வழங்கப்படும்.

அத்துடன் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று காலை நல்லூர் ஆலய முன்றலிலிருந்து ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம்பெறுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

### மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(சங்கானை)

சங்கானை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு சங்கானை மாவடி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு மற்றும் சங்கானை தெற்கு கிராமசேவையாளர் ந.சர்வானந்தம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

### தொழிலாளி காயம்

கட்டிடவேலை செய்துகொண்டிருந்தவேளை மரத்திலிருந்து சறுக்கியதால் விழுந்து காயமடைந்த நிலையில் தொழிலாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகரை சேர்ந்த பொன்ராசா (வயது -54) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக் அனுமதிக்கப்பட்டவராவார்.

## மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றுவது எமது கடமை

### மௌலவி அலாவுதீன் தெரிவிப்பு



எமது தலைவர் வே.பிரபாகரனின் வழிநடத்தலில் எமக்காக தமது உயிர்களைத் தந்த மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்ற வேண்டியது எமது கடமையென மௌலவி அலாவுதீன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவாளர்களினால் மாவீரர் பெற்றோர் கௌரவிக்கப்படும் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது ஆசியுரையில் மேலும் தெரிவித்ததாவது.

மாவீரர்கள் எனப்படுபவர்கள் தமது உயிரிலும் மேலாக எமது உயிர்களை நேசித்து எமக்காக தம்மைத் தந்தவர்கள். இதனால் இன்று நாம் தமிழர்களாக வாழ்கின்றோம். இன்று தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். அவரை வாழ்த்துகின்றோம்.

எமது தலைவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு இளைஞன்தான். இவர் பலவற்றைச் சாதித்திருக்கிறார். தனது போராட்ட வரலாற்றில் தற்போது சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார். இதன் காரணத்தினால் தமிழர் என்ற ரீதியில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.

விடுதலை வரலாற்றில் தியாகம் என்பது நிச்சயிக்கப்பட்ட வெற்றிக்குப் படிக்கல்லாக அமைகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது விடுதலைக்காக தமது உயிரைத் தந்த மாவீரர்களின் பெற்றோர்களை வணங்குகின்றேன். இவர்கள் பெருமைப்பட வேண்டியவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர் மணிமண்டபம் திறப்பு

(சாவகச்சேரி)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு 600 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட மாவீரர் மணிமண்டபம் நேற்று சங்கத்தானை அரசடிச் சந்தியில் காலை பத்து மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க ஈகைச்சுடரினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர், வர்த்தக சங்கத் தலைவர் அருளானந்தம் ஆகியோர் ஏற்றினர்.


இதனைத் தொடர்ந்து பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன் மண்டபத்தை திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் பொதுமக்கள் வர்த்தக சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்தினர். (34)


### இலவச சீருடைத்துணி வழங்கல்

மாவீரர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச் சங்கங்களின் கொத்தணி தனது அங்கத்துவ சங்கங்களான சங்கானை, தெல்லிப்பழை சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில் காரைநகர் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவில் இயங்குகின்ற முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு இலவச சீருடைத் துனிகளையும் சான்றிதழ்களையும் முன்பள்ளிகளுக்கு நேரில் சென்று வழங்கி வருகின்றது. இதில் 78 முன்பள்ளிகளைச் சேர்ந்த 2509 மாணவர்களும், 125 ஆசிரியர்களும் பயனடைகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இலக்கியச் சந்திப்பு

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளரும், விமர்சகருமான எஸ்.வி.இராசதுரையுடனான இலக்கியச் சந்திப்பொன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் இடம்பெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பருத்தித்துறையில் தேசியக் கொடியை இறக்குமாறு பொலிஸார் நிர்ப்பந்திப்பு!

பருத்தித்துறை நகரில் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுப் பந்தலில் ஏற்றப்பட்ட தேசியக் கொடியை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாகவே இறக்குமாறு பொலிஸார் பணித்ததால், பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.

தேசியக் கொடியேற்றுவதற்கு நேற்றுக் காலை பொலிஸார் தடை விதித்த போதும், பின் சமரசப் பேச்சுக்களின் மூலம் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தேசியக் கொடியை வழக்கப்படி மாலை 6.00 மணிக்கு இறக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பிற்பகல் 4.30 மணிக்கு அங்கு வந்த பொலிஸார் தேசியக் கொடியை இறக்குமாறு பணித்தனர்.

ஆனால், வழமையான நேரத்திற்குத்தான் தேசியக் கொடி இறக்கப்படும் என பொதுமக்கள் தெரிவித்தனர். இதனால் பலத்த வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதனிடையே நிகழ்வு நடந்த நான்கு புறமும் பொலிஸார் காவற் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டனர். கொடியை இறக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இராணுவத்தினர் அங்கு வந்து பிரச்சினைகளை ஏற்படுத்தினால் நிலைமை பூதாகரமாக மாறிவிடுமென அச்சுறுத்தி கொடியை இறக்குங்கள் எனக் கேட்டனர்.

இது குறித்துப் போராளிகள் மேலிடத்துக்கு அறிவித்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதனால், சிறிது நேரம் காத்திருக்குமாறும் கூறப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கு அறிவிக்கப்பட்டு அவரும், கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும் அங்கு வந்து பருத்தித்துறைப் பொலிஸாருடன் பொலிஸ் நிலையத்தில் சந்தித்துப் பேசினர்.

இதனைத் தொடர்ந்து இளம்பரிதி சம்பவ இடத்துக்கு வந்து வழமையான நேரத்துக்குத்தான் தேசியக் கொடி இறக்கப்படுமெனத் தெரிவித்தார். தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு தேசியக் கொடி இறக்கப்பட்டது. (14)

# தேசியத் தலைவரை வாழ்த்தும் கேடயங்கள் கையளிப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது அகவை நிறைவையொட்டி அவரை வாழ்த்தி பல்வேறு பொது அமைப்புக்கள் பாடசாலை மாணவர்கள், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கேடயங்கள், பரிசுப்பொருட்கள், வாழ்த்து மடல்கள் என்பவற்றை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் வைத்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் பல்வேறு அமைப்புக்கள் தேசியத் தலைவருக்கான கேடயங்கள் மற்றும் வாழ்த்து மடல்களைக் கையளித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு உட்பட பல்வேறு பகுதிகளிலும் தேசியத்தலைவருக்கான கேடயங்கள், வாழ்த்து மடல்கள் என்பனவும், அந்தந்தப் பகுதி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்களிடம் பொது அமைப்பு பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டன.

## விடுதலைப் புலிப்...

அக்கரைபற்று - சாகாமம் வீதியிலுள்ள மாவட்ட செயலகத்திலிருந்து மற்றுமொருவருடன் இவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை இன்னுமொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து எதிர்கொண்ட நபர்கள் இந்த் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

இடது பக்க மார்பிலும் வயிற்றிலும் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான இவர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

விசேட அதிரடிப் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் தாம் புகார் செய்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

## மன்னாரில்....

யினர் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

இதனிடையே பொதுமக்கள், படையினரின் வாகனம் மீது நடத்திய தாக்குதலினால் அந்த வாகனம் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

# ஈ.என்.டி.எல்.எப் முக்கியஸ்தர் கொழும்பில் சுட்டுக்கொலை!

ஈ.என்.டி.எல்.எவ் முக்கியஸ்தரான புளொட் ரங்கப்பா என்பவர் நேற்று மாலை கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். மட்டக்களப்பைச் சேர்ந்த புளொட் ரங்கப்பா என அழைக்கப்படும் சனிபோய் அலிக்கான் என்ற ஈ.என்.டி.எல்.எவ் இன் ஆரம்பகால உறுப்பினரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் தெமட்டகொட பகுதியில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

புளொட் அமைப்பிலிருந்த இவர், பின்னர் ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பில் இணைந்து கொண்டார்.

கடந்த 20 வருடங்களாக சென்னையில் வாழ்ந்து வந்த இவர், இந்திய உளவுத்துறையான றோவுக்காக பணியாற்றி வந்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்த ரங்கப்பா, கருணாவுக்கும் றோவுக்கும் இடையில் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டவர் என்றும், கருணாவின் கட்சி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இவர் ரி.பீ.சி வானொலி நடத்துனரான ராம்ராஜின் உத்தரவின் பேரில் இலங்கை வந்ததாகவும் கூறப்படுகிறது.

# வவுனியாவிலும் படையினர்...

களும் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனையடுத்து பொலிஸாருக்கும், பொதுமக்களுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியது. பொதுமக்கள் வீதியின் குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்து வாகனங்களைச் செல்லவிடாது தடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார், இராணுவத்தினரை சம்பவ இடத்துக்கு அழைத்து தேசியக் கொடியினை இறக்குமாறு வற்புறுத்தியதால் பதற்றம் மேலும் அதிகரித்தது.

இந்த நிலையில் - சம்பவ இடத்துக்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இரு தரப்பிடமும் பேச்சுக்களை நடத்தி சமரசம் செய்ய முற்பட்டபோது தேசியக் கொடியை இறக்குவதற்கு மறுப்புத்தெரிவித்த பொதுமக்கள் கொடிக்கம்பத்தினைச் சுற்றிநின்று கோஷம் எழுப்பினர். பின்னர் கண்காணிப்புக் குழுவினர். பொதுமக்கள் மற்றும் படையினருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து படையினர் அங்கிருந்து விலகிச்சென்றனர்.

இதனையடுத்து - மாலை 5.30 மணியளவில் கவச வாகனங்களில் வந்த படையினர் தேசியக் கொடியினை இறக்குமாறு மீண்டும் வற்புறுத்தினர். அதற்கு மறுப்புத் தெரிவித்த பொதுமக்கள் தமது உயிருள்ள வரை தேசியக்கொடியை இறக்க அனுமதிக்கப்போவதில்லை என உறுதியாகத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களைத் துப்பாக்கிகளால் கண்டபடி தாக்கிய படையினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு கொடிக்கம்பத்தைப் பிடுங்கி எறிந்ததுடன் மாவீரர் நினைவாலயத்தைச் சேதப்படுத்தினர்.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வவுனியாவைச் சேர்ந்தவர்களான ஜோதிராஜா, மன்னவன் ஆகிய இரு பொதுமக்கள் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் இடம்பெற்று, நிலைமை ஓரளவுக்கு சுமுகமாகியவேளையில் பொதுமக்கள் மீண்டும் மாவீரர் தின நிகழ்வுகளை அனுஷ்டித்துக் கொண்டிருந்த வேளையில் மாலை 6.15 மணியளவில் மீண்டும் அங்கு வந்த படையினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் போராளி ஒருவர் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட படையினர் மீண்டும் கொடிக்கம்பத்தை அடித்து வளைத்ததுடன் மாவீரர் நினைவாலயத்துக்கும் சேதம் ஏற்படுத்தினர்.

சம்பவத்தின் போது இராணுவத்தின் மேஜர்தர அதிகாரி ஒருவர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் முன்னிலையில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேலின் நெற்றியில் கைத்துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியுள்ளார்.

இதேவேளை - வேப்பங்குளம் பகுதியில் பல நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர் தின நிகழ்வுகளை அனுஷ்டித்து வருகின்றனர்.

மீண்டும் புலிக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றுவருகின்றன.

இதேசமயம் - கோயிற்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் ஏற்றப்பட்ட புலிக் கொடியினை படையினர் பொதுமக்களை அச்சுறுத்திவிட்டு இறக்கி எடுத்துச் சென்றனர். (03)

# வவுனியா, மன்னாருக்கு புறா ஹொவ்டே இன்று விஜயம்

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் செயற்பட்ட படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து படையினர் மேற்கொண்ட தாக்குதலால் ஏற்பட்டிருக்கும் பதற்றநிலை தொடர்பாக ஆராய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் இன்று அங்கு செல்லவுள்ளார்.

வவுனியா - மன்னார் மாவட்டங்களின் நிலைமை தொடர்பாக ஆராயவே மேஜர் ஜெனரல் புறா ஹொவ்டே அங்கு செல்லவுள்ளார். இவர் விடுதலைப் புலிகள், படைத்தரப்பு மற்றும் பொதுமக்கள் தரப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வவுனியா, மன்னார் பகுதிகளில் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவசர கடிதம் அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு தவறிவிட்டது!

### இரா.சம்பந்தன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்று இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய இலங்கையில் சமஷ்டி அரசியல் திட்டத்தை நிறுவும் தேவை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அரசியல் பொருளாதார அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

# மாவீரர் எழுச்சிநாள்...

தளபதி கேணல் பானு தேசியக் கொடியை ஏற்ற மட்டு - அம்பாறை துணைத்தளபதி பிரபா ஈகச்சுடரை ஏற்றினார்.

தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தேசியக் கொடியை ஏற்றினார். தாண்டியடி துயிலுமில்லத்தில் முன்மாரிக் கோட்டத் தளபதி ரமணன் தேசியக் கொடியேற்றினார்.

இந்த நிகழ்வுகளில் தளபதிகள், பொறுப்பாளர்கள். போராளிகள் பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

இதனையடுத்து விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை நீத்த கிழக்கு மாகாண மாவீரர்களின் நினைவாக மூன்று மாவீரர் நினைவாலயங்கள் அமைக்கப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் பட்டிருப்பு மகா வித்தியாலய மண்டபத்திலும், அம்பாறை மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் தம்பிலுவில் மகா வித்தியாலய மண்டபத்திலும், திருகோணமலை மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் திருமலை இந்து கலாசார மண்டபத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுதல் நாளை வரை மக்களின் வணக்கத்திற்காக திறக்கப்பட்ட இந்த. நினைவாலயங்களுக்கு பெருமளவு மக்கள் சென்று தமது வணக்கத்தைச் செலுத்திவருகின்றனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் திருமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத்தில் திருமலை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் சி.எழிலன் பொதுச்சுடரினையும், லெப்.சங்கரின் திருவுருவப் படத்திற்கு மாவீரர் மேஜர் ஜோன்சனின் தாயார் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் - பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மாவீரருக்கான தமது வணக்கத்தைச் செலுத்தினர்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வில், திருமலை முற்றவெளி மைதானத்திலிருந்து கலாசார மண்டபம் வரை சுமார் 300 இற்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் பங்குபற்றிய எழுச்சிப் பேரணி ஒன்றும் நடைபெற்றது.

வவுனியாவில் வேப்பங்குளம், கோயில்குளம் பகுதியிலும், மன்னாரில் பேரூந்து நிலையத்திலும் தேசியக் கொடியேற்றலுடன் எழுச்சிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

யாழ்ப்பாணத்தில் கொக்குவில் சந்திக்கருகாமையில் இம்ரான் பாண்டியன் படையணியினரால் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட நினைவு மண்டபம் மற்றும் சங்கத்தானை அரசடிச் சந்தியிலும் மாவீரர் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

இதுபோலவே வன்னியின் பல பாகங்களிலும் நேற்றைய தினம் மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியது.

# மக்கள் மீதான...

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்கள் உயிரிழக்கின்றபோது புலிகள அமைதி காத்து - கவனமாக தமது நகர்வினை முன்னெடுக்கும் நிலையில், இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமாதான நகர்வை தொடர்ந்து முன்னெடுக்கக் கூடிய சூழல் சீர்குலைந்து வருவதாக அண்மைய நிகழ்வுகள் சித்தரித்து நிற்கின்றன. அதுவே நிலைமை இறுக்கமடையக் காரணம்.

விடுதலைப் புலிகளோ, தமிழ் மக்களோ தொடர்ந்து பொறுமை காத்துக் கொண்டு அமைதி காப்பார்களோ அல்லது சகித்துக் கொண்டிருப்பார்களோ என்பதை எதிர்பார்க்க முடியாது.

சிங்கள அரசாங்கமும், சிங்களத் தலைமைகளும் நிலைமைகளைச் சீர் குலைக்கின்ற நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கி வருகின்றன என்பதை நாங்கள் இன்று உணர்ந்து வருகிறோம்.

அதுவே எதிர்காலத்தில் காத்திரமான முடிவுகளை நாங்களும், மக்களும் எடுக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டு இருக்கிறோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இராணுவத்தின்...

தேசியக் கொடி எரிக்கப்பட்டதுடன், மாவீரர் நாள் பதாகைகள், மாவீரர்களின் புகைப்படங்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றைச் சேதப்படுத்தி படையினர் அட்டூழியம் செய்துள்ளனர்.

இந்தக் காடைத்தனத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரை உடன் கைதுசெய்யவேண்டும் என்பது குறித்து நோர்வே தூதுவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழு இதுவரை இப்பிரச்சினையில் தலையிடாமல் இருக்கிறது. வடதமிழீழப் பகுதிகளில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பாதுகாப்புடன் இயங்க தமிழர் தரப்பிலிருந்து உறுதியளிக்கப்படும். இது தொடர்பான உரிய பதிலை எதிர்பார்ப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்-

மாவீரர்நாள் நிகழ்வுகளை திட்டமிட்டுச் சீர்குலைக்கும் நோக்குடனேயே படைத்தரப்பு தமிழ் மக்கள்மீது தாக்குதலை நடத்தி சீண்டி வருகின்றது என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.